# கோவிட் -19 தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, ப்ராம்ப்ட்டன் நகரில் சமூக நிகழ்ச்சிகளில் கூடுபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது

*நகர நிர்வாகமானது, குடியிருப்புவாசிகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை காப்பதற்காக கோவிட்-19 க்கான உப சட்டங்களை ஜனவரி 2021 வரை நீட்டிக்கிறது*

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 18, 2020) – கோவிட்-19 தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்துமுகமாக, இன்று முதல், கண்காணிக்கப்படாத சமூகக் கூட்டங்கள் மற்றும் ப்ராம்ப்ட்டன் மற்றும் பீல் பிராந்தியம் முழுவதும் ஒழுங்கமைக்கப்பட்ட பொது நிகழ்வுகளில், கட்டிடங்களுக்குள்ளாக பத்து பேர்களுக்குள்ளாகவும், திறந்தவெளியில் கூடுபவர்கள் 25 பேர்களுக்குள்ளும் மட்டுமே கூடலாம் என கூடுபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, ஒன்ட்டேரியோ அரசாங்கம் நேற்று அறிவிப்பு செய்தது. இதில்,  தனியார் குடியிருப்புகள், கொல்லைப்புறங்கள், பூங்காக்கள் மற்றும் பிற பொழுதுபோக்கு பகுதிகளில் நடைபெறும் செயல்பாடுகள், விருந்துகள், இரவு உணவுகள், கூட்டம் கூடுதல், BBQ கள் அல்லது திருமண வரவேற்புகள் ஆகியவை அடங்கும்.

மதுபார்கள், உணவகங்கள், சினிமா அரங்கங்கள், மாநாட்டு மையங்கள் அல்லது விருந்து அரங்குகள், உடற்பயிற்சிசாலைகள் மற்றும் பொழுதுபோக்கு விளையாட்டு அல்லது கலை நிகழ்ச்சிகள் போன்ற ஊழியர்களும் இருக்கின்ற வணிகங்கள் மற்றும் கட்டிடங்களில் நடைபெறும் நிகழ்வுகள் அல்லது கூட்டங்களுக்கு இந்தப் புதிய வரம்புகள் பொருந்தாது. இந்த வணிகங்கள் மற்றும் கட்டிடவசதிகளுக்கான பொது சுகாதாரம் மற்றும் பணியிட பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றின் மீதான தற்போதைய விதிகள் தொடர்ந்து நடைமுறையில் இருந்துவரும். மேலும் தகவல்களுக்கு, ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் ஊடக வெளியீட்டைப் பார்க்கவும்.

கோவிட்-19 தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒன்ட்டேரியோ அரசு மற்றும் பீல் பிராந்திய அமைப்பின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர சபையானது,  ப்ராம்ப்ட்டன் நகர கோவிட் -19 தொற்று பரவலுக்கான அவசர நடவடிக்கைகள் துணை சட்டம் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 கட்டாய முகத்திரைகள் சட்டம் ஆகியவற்றின்  காலாவதி தேதியை ஜனவரி 31, 2021 வரை நீட்டித்துள்ளது.

## ப்ராம்ப்ட்டன் நகர கோவிட் -19 தொற்று பரவலுக்கான அவசர நடவடிக்கைகள் துணை சட்டம்

ப்ராம்ப்ட்டன் நகர கோவிட் -19 தொற்று பரவலுக்கான அவசர நடவடிக்கைகள் துணை சட்டத்தின் கீழாக, உடல் ரீதியான சமூக விலகலுக்கான ஒழுங்குமுறையை பின்பற்றாத நபர்களுக்கு குறைந்தபட்சம் $

500 அபராதம் மற்றும் அடுத்தடுத்த ஒவ்வொரு குற்றத்திற்கும் அதிகபட்சமாக, $100,000 வரையிலுமான அபராதம் விதிக்கப்படலாம்.

சட்டத்தின் கீழாக நகராட்சி விதிமுறைகள் கூறும் விஷயங்கள்:

- ஒவ்வொரு நபரும் பொதுக் கட்டிடங்களில் இருக்கும்போது, ஒரே வளாகத்தில் ஒன்றாக வசிக்கும் நபர்கள் தவிர,மற்ற ஒவ்வொரு நபரிடமிருந்தும் குறைந்தபட்சம் 2.0 மீட்டர் தூரம் தள்ளி இருக்க வேண்டும்,
- ஒரே வளாகத்தில் ஒன்றாக வசிக்கும் நபர்கள் அல்லது வணிக ஊழியர்களைத் தவிர, ஒவ்வொரு நபரிடமிருந்தும் 2.0 மீட்டருக்கும் குறைவான தூரத்தில் எந்தவொரு தனிநபரும் வணிக வளாகத்தில் அமரவோ அல்லது வணிக வளாகத்திற்கு வெளியில் நிற்கவோ எந்த வணிகமும் அனுமதிக்கலாகாது.

**கட்டாய முகத்திரைகள் உப சட்டம்**

கட்டாய முகத்திரைகள் சட்டத்தின் கீழாக, கோவிட்-19 தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக ப்ராம்ப்ட்டனில் உள்ள அனைத்து உள்ளரங்க பொது இடங்களிலும் மருத்துவமல்லாத முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணிவது அவசியமாகின்றது. பொது நிறுவனங்கள் மற்றும் வணிகங்கள் ஆகியவை, தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற உள்ளரங்க பொது இடங்களில் முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணிவதை உறுதி செய்ய வேண்டும் என இந்த தற்காலிக சட்டம் கோருகிறது.

மருத்துவ காரணங்களால் முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணிய முடியாதவர்கள் உள்ளிட்ட சில குறிப்பிட்ட நபர்களுக்கு இந்த துணை சட்டம் விலக்கு அளிக்கிறது: இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள்; அவசர உத்தரவுகளுக்கு இணங்க ஒரு தடகள விளையாட்டு நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தில் உணவு அல்லது பானம் உட்கொள்ளும் நபர்கள் (மாகாண நிர்வாகம் உட்புற உணவு சாப்பிடுவதற்காக மீண்டும் திறக்க அனுமதிக்கும் போது). முழுமையான ஒரு பட்டியலுக்கு,வருகை தரவும்: brampton.ca/masks

இணக்கமில்லாமை பற்றி புகாரளிக்க, குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்கள் 311 என்ற எண்-ஐ அழைக்கலாம்.

COVID-19 தொற்று பரவல் பற்றிய ப்ராம்ப்ட்டன் நகர செவிசாய்ப்பு மீதான சமீபத்திய புதுப்பிப்புகளுக்கு, பார்வையிடவும்: brampton.ca/COVID19

**அறிஞர் கூற்றுக்கள்**

# BRAMPTON Service and Information Update

“ நமது சமூகத்தைப் பாதுகாக்கத் தேவையான எந்த நடவடிக்கைகளையும் ப்ராம்ப்ட்டன் நகரம் தொடர்ந்து எடுக்கும். தயவுசெய்து உடல் ரீதியான சமூக விலகலுக்கான தூரத்தை கடைப்பிடிக்குமாறும், புதிய சமூக கூட்டம் கூடுவதில் விதிக்கப்பட்ட வரம்புகளுக்கு இணங்குமாறும், ப்ராம்ப்ட்டன் நகர கோவிட் -19 அவசர நடவடிக்கைகள் துணை சட்டம் மற்றும் கட்டாய முகத்திரைகள் சட்டம் ஆகியவற்றை பின்பற்றுமாறும் குடியிருப்புவாசிகளை நான் கேட்டுக்கொள்கிறேன். ப்ராம்ப்ட்டனைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், நமது சமூகத்தில் COVID-19 தொற்று பரவுவதைத் தடுக்கவும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ஒரு சமூகமாக இருந்தபடி, ப்ராம்ப்ட்டன் நகரில் COVID-19 தொற்று பரவுவதைக் குறைக்கத் தேவையான பணிகளை நாம் தொடர்ந்து செய்ய வேண்டியது அவசியம் என்பது தெரிந்ததே. தயவுசெய்து எங்கள் நீட்டிக்கப்பட்ட ப்ராம்ப்ட்டன் நகர கோவிட் -19 அவசர நடவடிக்கைகள் துணை சட்டம் மற்றும் கட்டாய முகத்திரைகள் சட்டம் ஆகியவற்றை  பின்பற்றுமாறும், குறைக்கப்பட்ட சமூகக் கூட்ட எண்ணிக்கை வரம்புகளை மதிக்கும்படியும் நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்;  இதனால், மீட்புக்கான நமது பாதையில் நாம் ஒன்றாக முன்னேறி நமது சமூகத்தினை பாதுகாக்க முடியும்."

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைமைப்பொறுப்பு, மேயரின் மறுதிறப்பு மற்றும் மீட்சிக்கான பணிக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ எங்கள் சமூகத்தில் கோவிட்-19 தொற்று பரவுவதை நகர நிர்வாகம் தொடர்ந்து தீவிரமானதாகக் கருதுகிறது. நமது நீட்டிக்கப்பட்ட ப்ராம்ப்ட்டன் நகர கோவிட் -19 அவசர நடவடிக்கைகள் துணை சட்டம் மற்றும் கட்டாய முகத்திரைகள் சட்ட்த்தினை, நமது ஊழியர்கள் மூலமாக அமலாக்கம் செய்வதன் மூலம், உடல் ரீதியான சமூக விலகல் மற்றும் சமூக கூட்டம் கூடுதல் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஊக்குவிக்கவும், நமது சமூகம் முழுவதும் மருத்துவரல்லாத முகமூடிகளைப் பயன்படுத்தவும் அனுமதிக்கும். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

ஊடக தொடர்பு
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர்,, ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca